யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 08 | வரலாறு<br>சுட்டெண் : ............................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி - I

மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. மின்னேரியா வாவியினை நிர்மாணித்தமையால் "மின்னேரியாத் தெய்வம்" என போற்றப்படும் மன்னன்
 1) பண்டுகாபயன் 2) தாதுசேனன்
 3) மகாசேனன் 4) தேவநம்பியதீஸன்

02. வசப மன்னால் அம்பன் கங்கைக்கு குறுக்கே அணைகட்டி அமைக்கப்பட்ட கால்வாய்
 1) ஆழிசாரக் கால்வாய் 2) யோத கால்வாய்
 3) தலவந்து கால்வாய் 4) மினிப்பே கால்வாய்

03. புராதன காலத்தில் பத்மஸ்வர என்ற பெயரில் பூங்கா அமைத்த மன்னன்
 1) கோதாபயன் 2) 1ம் காசியப்பன்
 3) முதலாம் அக்போ 4) குட்டகண்ணதிஸ்ஸ

04. இலக்கிய மூலாதாரங்களின்படி இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது தாதுகோபம்
 1) அபயகிரி 2) தூபராம
 3) ரூவன்வெலிசாய 4) மிரிஸவெட்டிய

05. கண்டி இராச்சியத்தின் இறுதி மன்னன்
 1) இராஜாதி இராஜசிங்கன் 2) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன்
 3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் 4) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

06. பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் பின்பற்றப்பட்ட சிலைமனை மரபு முறை யாது?
 1) கந்தகுடி மரபு 2) சோழர் மரபு
 3) கெடிகே மரபு 4) லென்விகாரை மரபு

07. ரூவன்வெலிசாய முற்றத்தில் காணப்படும் மன்னர்களின் சிலைகள் எவை?
 1) துட்டகைமுனு, பாதிகாபயன் 2) வசபன், தாதுசேனன்
 3) மகாசேனன், பாதிகாபயன் 4) வலகம்பா, துட்டகைமுனு

08. சந்திரவட்டக்கல்லில் எருதின் உருவம் நீக்கப்பட்ட காலம் எது?
 1) அநுராதபுரம் 2) பொலன்னறுவை
 3) கண்டி 4) கோட்டை

09. கண்டி இராச்சிய மன்னனான ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னனின் அரச வம்சம் எது?
 1) சோழர் வம்சம் 2) சேர வம்சம்
 3) நாயக்க வம்சம் 4) மானவர்ம வம்சம்

10. கண்டி இராச்சியத்தில் நிலத்தின் மீது மரத்தூண்களை நட்டு அதன் மீது அமைக்கப்பட்ட விகாரை
 1) மெதவல டெம்பிட விகாரை 2) தலதா மாளிகை
 3) லங்காதிலக விகாரை 4) அபயகிரி விகாரை

Education கல்வி අධ්‍යාපන

11. சீயம் நிக்காய எனும் பௌத்த சமயப் பிரிவு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட போது ஆட்சி செய்த மன்னன்

1) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
2) இரண்டாம் விமலதர்மசூரியன்
3) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன்
4) இரண்டாம் இராஜசிங்கன்

12. கண்டி இராச்சியத்தில் பௌத்தசமய மறுமலர்ச்சியினை ஏற்படுத்திய தேரர்

1) உபாலி தேரர்
2) சுமங்கல தேரர்
3) ஸ்ரீ சங்கராஜ தேரர்
4) சரணங்கர தேரர்

13. மறுமலர்ச்சி காலத்தில் அச்சு இயந்திரத்தினை கண்டுபிடித்து அறிவுத்துறையில் புரட்சி ஏற்படுத்தியவர்

1) மைக்கல் ஆஞ்சலோ
2) லியனாடோ டாவின்சி
3) மொனெடெலோ
4) ஜோஹன்னஸ் கூட்டன் பேர்க்

14. நிரல் **'அ'**வில் தரப்பட்டுள்ள நாடுகள் நிரல் **'ஆ'** உள்ள விடயங்களுடன் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் மிகச் சரியான விடைத் தொகுதி

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| 1) இத்தாலி | A - பரிஸ் |
| 2) பிரான்ஸ் | B - ஒக்ஸ்போட் |
| 3) இங்கிலாந்து | C - பொலன்ஞ்ஞோ |

1) CAB
2) ACB
3) BCD
4) CBA

Education
கல்வி
அධ්‍යාපන

15. மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய கலைகளின் தோற்றத்தின் மத்திய நிலையமாக விளங்கிய நகரம்

1) உரோம்
2) வெனிஸ்
3) புளோரன்ஸ்
4) மிலான்

16. உரோமில் சிஸ்டைன் ஆலயப்பாவுகையில் "இறுதித் தீர்ப்பு" என்ற ஓவியத்தினை வரைந்தவர் யார்?

1) டொனெடெலோ
2) மைக்கல் ஆஞ்சலோ
3) லியனாடோ டாவின்சி
4) இராஸ்மஸ்

17. மறுமலர்ச்சிக் காலத்தின் எழுத்தாளரான "வில்லியம் ஷேக்ஸ் பியரின்" தாய்நாடு எது?

1) இத்தாலி
2) ஜேர்மனி
3) இங்கிலாந்து
4) பிரான்ஸ்

18. புவி கோள வடிவானது என்றும், சூரியனை மையமாகக் கொண்டு கோள்கள் அனைத்தும் புவியைச் சுற்றி வருவதாகக் குறிப்பிட்டவர்

1) நிக்கலஸ் கொப்பர்னிக்கஸ்
2) கலிலியோ கலிலி
3) மைக்கல் சர்டேன்
4) ஜொஹென்னைப் கெப்லர்

19. திருச்சபைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த இயக்கத்தின் தலைவரான மாட்டின் லூதரின் தாய்நாடு

1) இத்தாலி
2) ஜேர்மனி
3) ஸ்பெயின்
4) இங்கிலாந்து

20. மனித உடலில் குருதி நுரையீரலில் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் இதயத்தை அடைந்து பின் பரவிச் செல்வதை கண்டறிந்தவர்

1) வில்லியம் ஹார்வி
2) பெரசல்ஸ்
3) கெப்லர்
4) மைக்கல் சர்டேஸ்

($20 \times 2 = 40$ புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி - II

முதலாம் வினா உட்பட, நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01. அ) **இரண்டாம் தவணையில் வரலாறு பாடத்தில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) இரண்டாம் தவணையில் வரலாறு பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டுக் கருவியின் பெயரைத் தருக. (02 புள்ளிகள்)

2) அக்கணிப்பீடு மேற்கொண்ட பாட அலகு எது? (02 புள்ளிகள்)

3) அக்கணிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நீர் பயன்படுத்திய தரஉள்ளீட்டுப் பொருட்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

4) அக்கணிப்பீட்டினை மேற்கொண்டதால் நீர் பெற்ற நன்மைகள் இரண்டு தருக. (04 புள்ளிகள்)

ஆ) **தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.**

1) அநுராதபுரம்
2) கலாவாவி
3) கண்டி
4) கொழும்பு
5) மிகிந்தலை
6) குருணாகல்
7) சிகிரியா
8) திருகோணமலை
9) மட்டக்களப்பு
10) மினிப்பே கால்வாய்
11) மன்னார்
12) மகாவலிகங்கை

(12 × 1 = 12 புள்ளிகள்)

02. 1) அநுராதபுர காலத்திற்குரிய பிரமாண்டமான தாதுகோபங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

2) அநுராதபுர கால சந்திரவட்டக் கல்லில் காணப்படும் மிருகங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

3) சிலைமனை மரபில் கந்தகுடி மரபினை பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

4) சிகிரியா சித்திரத்தின் சிறப்பியல்புகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

03. 1) கண்டி இராச்சியத்தினை தனியரசாக தோற்றுவித்த முதலாவது மன்னன் யார்? (02 புள்ளிகள்)

2) பின்வரும் கண்டி மன்னர்கள் போர்த்துக்கேயரின் படைகளை தோல்வி அடைய செய்த இடங்களைக் குறிப்பிடுக.

i) முதலாம் விமலதர்மசூரியன்
ii) செனரத் மகன் மகா ஆஸ்தான
iii) இரண்டாம் இராஜசிங்கன்

(03 புள்ளிகள்)

3) கண்டி இராச்சியத்தினை ஆட்சி புரிந்த சிங்கள, பௌத்த வம்ச மன்னர்கள் மூவரைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

4) இரண்டாம் இராஜசிங்க மன்னனின் ஆட்சி முக்கியத்துவம் இரண்டு தருக. (04 புள்ளிகள்)


kalvi.lk

**04.** 1) கண்டிய சமூகத்தின் திருமண முறைகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

2) கண்டி இராச்சியத்தின் பொருளாதாரத்தில் உள்ளடங்கிய மூன்று துறைகளையும் தருக. (03 புள்ளிகள்)

3) பின்வரும் உற்பத்திப் பொருட்களுக்கு பிரசித்தி பெற்ற இடங்களைக் குறிப்பிடுக.

i) இரும்பு ii) செம்பு iii) பன்புல் (03 புள்ளிகள்)

4) கண்டி இராச்சியத்தின் ஓவியக் கலையின் சிறப்புப் பண்புகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

**05.** 1) மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய பின்வரும் எழுத்தாளர்களின் நாடுகளைக் குறிப்பிடுக.

i) தாந்தே ii) வில்லியம் ஷேக்ஸ்பியர் iii) இராஸ்மஸ் (03 புள்ளிகள்)

2) மைக்கல் ஆஞ்சலோவின் சிறந்த சிற்பக் கலைப் படைப்புக்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

3) மறுமலர்ச்சிக் கால கலைப் பண்புகளின் இயல்புகள் மூன்றினைத் தருக. (03 புள்ளிகள்)

4) மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)


**06.** 1) மறுமலர்ச்சிக் காலத்தில் வைத்திய துறைக்கு பங்களிப்பு செய்த அறிஞர்கள் மூவரைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

2) மறுமலர்ச்சிக் காலத்தில் புவி தொடர்பாக முன்வைக்கப்பட்ட புதிய கொள்கைகளை வெளியிட்ட மூவரைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

3) திருச்சபைக்கு எதிரான மதஇயக்கத் தலைவர்கள் இருவரைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

4) மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய கல்விமான்கள் தோற்றம் பெற்றதற்கான காரணங்கள் இரண்டு தருக. (04 புள்ளிகள்)


kalvi.lk



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**